## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>பூக்கள் விலை உயர்வு கடும் பனிப்பொழிவால் வரத்து குறைந்தது</u>

பூக்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சென்னையில் ஒரு கிலோ மல்லி 900 ரூபாய்க்கும், புதுச்சேரியில் 1,000ரூபாய்க்கும், குமரி மாவட்டம் தோவாளை பூ சந்தை மற்றும் சேலம் பூ சந்தையில் கிலோ மல்லி 800 ரூபாய்க்கும் விற்பனையானது. 60 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சம்பங்கி 100ரூபாய்க்கு விற்பனையானது. இதுதவிர 100 ரூபாய்க்கு விற்கப்பட்ட அரளி பூக்களின் விலை இருமடங்கு அதிகரித்து 200 ரூபாய்க்கு விற்றது. கிருஷ்ணகிரி,சேலம், திண்டிவனம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பாண்டிச்சேரிக்கு பூக்கள் வருகிறது.மல்லி பூவுக்கு இணையாக கனகாம்பரம் பூவின் விலையும் அதிகரித்துள்ளது. கடும் பனிப்பொழிவு காரணமாக மலர் சந்தைகளில் பூக்களின் வரத்தும் குறைந்துள்ளதால் . சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி, ஓமலூர் சுற்றுப்பகுதியில் இருந்து, சேலம் மலர் சந்தைக்கு பூக்கள் வரும் பூக்களின் வரத்து குறைந்துள்ளது. இதனால் பூக்கள் விலை கடுமையாக உயர்வடைந்துள்ளது.

## <u>ஆந்திரத்தில் பயிர்க் கடன் தள்ளுபடி: சந்திரபாபு நாயுடு அறிவிப்பு</u>



ஆந்திரத்தில் விவசாயிகள் வாங்கிய பயிர்க்கடன் பல கட்டங்களாக அரசால் கட்டப்படும். முதல் தவணையாக இம்மாதம் 10ஆம் தேதி பயிர்க் கடனுக்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என ஆந்திர முதல்வர் என்.சந்திரபாபு நாயுடு அறிவித்தார். "இதன்படி ரூ.50,000 பயிர்க்

கடன் வைத்துள்ளவர்களின் கடன் முழுவதும் முதல் கட்டத்தில் தள்ளுபடி செய்யப்படும். அதற்கு அதிகமாக கடன் வைத்துள்ளவர்களுக்கு கடன் தொகையில் 20 சதவிகிதம் மட்டும் முதல் கட்டத்தில் அடைக்கப்படும். மீதமுள்ள தொகை அடுத்த 4 ஆண்டுகளில் சம பங்குகளாக அடைக்கப்படும். முதல் கட்டத்தில் கடன் அடைக்கும் பணி 6ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 22ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். முழுக் கடனும் தள்ளுபடி செய்யப் படுபவர்களுக்கு இம்மாதம் 12ஆம் தேதி அவர்கள் வங்கிக் கணக்கில் கடன் தொகை வரவு வைக்கப்படும். கடந்த தேர்தலுக்கு முன் பாதயாத்திரை மேற்கொண்டபோது விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியை இதன் மூலம் முதல்வர் சந்திரபாபு நாயுடு நிறைவேற்றிவிட்டார்" என ஆந்திர உள்ளாட்சித் துறை அமைச்சர் பி.நாராயணா தெரிவித்துள்ளார்.

## ஆடு வளர்ப்போர் சங்க கூட்டம்

இளையான்குடி ஒன்றியம் கொங்கப்பட்டியில் ஆடு வளர்ப்போர் சங்கக் கூட்டம் அதன் தலைவர் என்.பி.ஒ.கிங் கருப்பையா தலைமையில் நடைபெற்றது. சங்க நிர்வாகிகள் லலித் கிருஷ்ணன், தனசேகர் யாதவ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், ஆடு வளர்ப்போருக்கு தனியாக மாவட்டம், வட்டார அளவில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும், இளையான்குடி-கொங்கப்பட்டி சாலையை சீரமைக்க வேண்டும், ஆடு வளர்ப்போருக்கு பசுமை வீடுகள், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விருதுநகர் மாவட்டத்தில் வேளாண்மை வங்கிகள் மூலம் உரம், பயிர்க்கடன் விவசாயிகள் உரிய காலத்தில் பயனடையும் வகையில் விளைவிக்கும் தன்மைக்கேற்ப பயிர்க்கடன், விதைகள் மற்றும் இடுபொருள்கள் வழங்குவதாக கூட்டுறவுத் துறை அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விருதுநகர் மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: இம்மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்துள்ளது. சாகுபடி செய்யும் பயிர்களின் தன்மைக்கேற்ப தேவையான பயிர்க்கடன்கள், தொடக்க வேளாண்மை

கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் தொப்பலாக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வத்திராயிருப்பு கிராமிய கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் முகவூர் உழவர் பணி கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் விளைநிலங்களின் மண்வளத் தன்மை, நீர் வளம் மற்றும் இட வேண்டிய உரங்கள் குறித்து விவசாயிகளுக்கு அறிவியல் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. மேலும், வாழ்வாங்கி, குருந்தமடம், வெள்ளையாபுரம், பந்தல்குடி, நென்மேனி, மல்லாங்கிணர், கொல்லப்பட்டி, எம்.ரெட்டியபட்டி, சிங்கராஜாகோட்டை, சம்மந்தபுரம், சேத்தூர், திருத்தங்கல், குமிழங்குளம், செங்குளம், முடுக்கன் குளம், கிருஷ்ணாபுரம், முகவூர், மாத்திநாயக்கன்பட்டி, தமிழ்பாடி, சாமிநத்தம், குன்னூர், சுந்தரபாண்டியம், கூமாபட்டி, பி.ராமசந்திராபுரம், நாச்சியார்பட்டி, படிக்காசுவைத்தான்பட்டி, அத்திக்குளம், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயத்திற்கு தேவையான டிராக்டர், பவர் டில்லர் மற்றும் பூச்சிமருந்து தெளிப்பான் போன்ற விவசாய உபகரணங்கள் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகிறது. யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் கலப்பு உரங்கள் தேவையான அளவு இருப்பு உள்ளது. எனவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை விவசாயிகள் அணுகி பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.

## வெள்ளமடை ஊராட்சியில் கால்நடைகளுக்குத் தடுப்பூசி

எஸ்.எஸ்.குளம் ஒன்றியம், வெள்ளமடை ஊராட்சிக்கு உள்பட்ட காளிபாளையத்தில் வெள்ளிக்கிழமை கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. வெள்ளமடை ஊராட்சி, காளிபாளையத்தில் வைரஸ் காய்ச்சல் தாக்கி நாட்டுக் கோழிகள், ஆடுகள் உள்ளிட்டவை இறந்துவந்தன. இந்நிலையில், வெள்ளிக்கிழமை வெள்ளமடை கால்நடை மருத்துவர் வித்யா மனோகரி தலைமையில், 6 பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் காலை 7 மணி முதல் காளிபாளையம் கிராமத்தில் உள்ள ஆட்டுப் பண்ணைகளிலும்,

வீடுகளிலும் வளர்க்கப்படும் 200 ஆடுகளுக்கு தடுப்பூசிகள் போட்டனர். மேலும், வாய்களில் புண்கள் வருவதை தடுப்பதற்கு சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டது. மேலும், வெள்ளமடை ஊராட்சி கால்நடை மருத்துவமனையில் கறவை மாடுகள், ஆடுகளுக்கு நோய் பரவாமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பூசிகள் போடப்பட்டன. இதுகுறித்து, எஸ்.எஸ்.குளம் ஒன்றியத் தலைவர் கிருஷ்ணசாமி கூறியது: வெள்ளமடை ஊராட்சி, காளிபாளையம் பகுதிகளில் பறவைக் காய்ச்சல் நோய் பரவவில்லை. வெள்ளைக் கழிச்சல் நோய் ஏற்பட்டதால் தான் கோழிகள் இறந்துள்ளன. வைரஸ் காய்ச்சல் மேலும் பரவாமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது என்றார். "கடலூர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லை' கடலூர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லையென கால்நடை பராமரிப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர். கடலூர் துறைமுகம் அருகேயுள்ள பச்சாங்குப்பம் ஊராட்சி மகாலட்சுமி நகர் பகுதியில் வெள்ளிக்கிழமை சில கோழிகள் இறந்த நிலையில் கிடந்தன. தற்போது பரவி வரும் பறவைக் காய்ச்சலால் இறந்த கோழிகளை சிலர் இங்கே வீசிவிட்டு சென்றிருக்கலாம் என்று கருதி அப்பகுதியினர் இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறையினருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து, கால்நடை பராமரிப்புத் துறை துணை இயக்குநர் ஆர்.சுகுமார், உதவி இயக்குநர் ஜி.எஸ்.கணேசன், மருத்துவர்கள் வி.எஸ்.ராகவன், சுந்தரம், ஆய்வாளர் மோகனபிரியா ஆகியோர் சென்று ஆய்வு மேற்கொண்டனர். பின்னர், இதுகுறித்து துணை இயக்குநர் ஆர்.சுகுமார் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் 217 கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு பண்ணைக்கு சுமார் 2 ஆயிரம் முதல் 20 ஆயிரம் கோழிகள் வரை வளர்க்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான கோழிகள் உள்ளூர் தேவைக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. பறவைக்காய்ச்சல் தொடர்பாக பண்ணையாளர்களை அழைத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் என்பது கோழிக்கு மட்டுமல்ல வாத்து உள்பட அனைத்துப் பறவைகளையும் தாக்கும் இன்புளுன்சா வைரஸ் ஆகும். இது பறவைகளிடமிருந்து பன்றிக்கும் பின்னர் பன்றியிலிருந்து மனிதருக்கும் காற்றின் மூலமாக பரவும் தன்மை கொண்டது. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் தீவிரம் காட்டி வருகிறோம். பண்ணை வைத்திருப்போரும், வீட்டில் கோழி வளர்ப்போரும் கோழி வளர்க்கும் இடத்தைச் சுற்றிலும் சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடரை தெளித்து வந்தாலே போதுமானது. பறவைக்காய்ச்சலை பொறுத்தவரையில் எந்த அறிகுறியும் தோன்றாது. நோய் தாக்கிய 3 மணி நேரத்திலிருந்து 6 மணி நேரத்திற்குள் மொத்தமாக பறவைகள் இறந்துவிடும். தற்போது பச்சாங்குப்பத்தில் இறந்த கோழிகள் இயற்கையான முறையில் இறந்து இப்பகுதியில் வீசப்பட்டவைதான். பறவைக்காய்ச்சலுக்கான அறிகுறி இல்லை என்றார். மேலும், ஒவ்வொரு சனிக்கிழமையும் கால்நடைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மருந்தகங்களில் பறவைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. பொதுமக்கள் இதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## <u>பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு அதிகபட்ச மானியம்</u>

தென்னை விவசாயிகள் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு அதிகபட்ச மானியம் வழங்க வேண்டும் என்று மக்களவையில் கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதி அதிமுக உறுப்பினர் கே.அசோக்குமார் வலியுறுத்தினார். இது தொடர்பாக மக்களவையில் வெள்ளிக்கிழமை அவர் முன்வைத்த கோரிக்கை: தென்னிந்திய மாநிலங்களில் பெரிய அளவில் தென்னை சாகுபடி நடைபெறுகிறது. தமிழகத்தில் 4.25 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி நடைபெறுகிறது. இதை நம்பி ஏராளமான குடும்பங்கள் உள்ளன. கிருஷ்ணகிரி தொகுதியில் மட்டும் 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் 16 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை மரங்கள் கரையான், தென்னைமரப்பூச்சி, கருந்தலைப்புழு, இலைப்புழு, செந்நிறப்பனை வண்டு போன்ற பல்வேறு பூச்சித் தாக்குதலால் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றன. அண்மைக்கால

கணக்கெடுப்பின்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் 500 ஹெக்டேரில் தென்னை மரங்கள் இது போன்று பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. பெரும்பாலான பூச்சிகள் பெரிய அளவில் மரங்களின் இலைகளைப் பாதிக்கச் செய்து விடுகின்றன. பூச்சித் தாக்குதல் காரணமாக ஓர் ஏக்கருக்கு இரு ஆண்டுகளுக்கு ரூ.50 ஆயிரம் வரை விவசாயிகள் இழப்பைச் சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. இது போன்ற பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த கடந்த இரு ஆண்டுகளாக செயற்கை உரங்களைப் பயன்படுத்தியும், எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப் பெறவில்லை. இவற்றை உரிய வகையில் கட்டுப்படுத்த ரசாயனங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் தேவைப்படுப்படுகின்றன. ரசாயன மருந்துகள் பயன்பாட்டு முறைக்கு தோராயமாக ஓர் ஏக்கருக்கு ஒவ்வொரு 45 நாள்களுக்கும் ரூ.2 ஆயிரம் தேவைப்படுகிறது. மேலும், பாதிக்கப்படாத தென்னை மரங்களுக்கும் தேவையான பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. ஏழை தென்னை விவசாயிகளுக்கு உதவ தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதிக அளவில் தேவைப்படும் இந்த ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்குவதற்கான செலவை ஈடுகட்ட தென்னை விவசாயிகளால் இயலாது. எனவே, இதுபோன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு அதிகபட்ச மானியத்தை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கொப்பரை விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

கோபி:கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், இந்தவாரம் கொப்பரை தேங்காய் பருப்பு விலை, கிலோவுக்கு, பத்து ரூபாய் அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கோபி, டி.என்.பாளையம் மற்றும் தாளவாடி பகுதியில், தென்னை உற்பத்தி அதிகம் உள்ளது. தேங்காயை

பருப்பாக உடைத்து, அதை நன்கு உலர்த்தி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். தரம் வாரியாக, ரகசிய டெண்டர் முறையில் ஏலம் விடப்படுகிறது.கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில், தேங்காய் பருப்பு கிலோ, 100 முதல், 120 ரூபாய் வரை விற்பனையானது. முன் எப்போதும் இல்லாத வகையில், அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ் ச்சி அடைந்துள்ளனர். தீபாவளிக்கு பின், தேங்காய் பருப்பு விலை படிப்படியாக சரியத்துவங்கியது. கடந்த, இரு வாரங்களுக்கு முன், கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கி÷லா, 89 முதல் அதிகபட்சமாக, 90.25 வரை விற்றன.கடந்த, 27ல், 201 மூட்டை வரத்து வந்து, கிலோ, 71.33 முதல், 73.93 வரை விற்றன. 100 முதல், 120 வரை விற்ற தேங்காய் பருப்பின் விலையில், பெரும் சரிவு ஏற்பட்டது. இந்த வாரம், 158 மூட்டை தேங்காய் பருப்பு விற்பனைக்கு வந்தன. குறைந்தபட்சம் கிலோ, 74.59க்கும், அதிகபட்சமாக, 83.93 ரூபாய்க்கும் விற்றன. கடந்த வாரத்தை காட்டிலும், இந்த வாரம் கிலோவுக்கு, சராசரி, பத்து ரூபாய் அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## <u>விவசாய தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் தேர்வு</u>

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி ஒன்றியம் கப்பியாம்புலியூரில், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் தேர்வு நடந்தது. சங்க நிர்வாகிகள் தேர்வு கூட்டத்திற்கு கிளை தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். நகர செயலாளர் பால்ராஜ், வட்டக்குழு ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதிய தலைவராக சண்முகம், செயலாளராக குமார், பொருளாளராக கலியமூர்த்தி, துணைத் தலைவர்களாக டில்லித்துரை, பிரியா,கருவேலன், சுசீலா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் . கப்பியாம்புலியூர் வி.ஐ.பி., நகர் பகுதிக்கு மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி செய்து தர வேண்டும். கப்பியாம்புலியூர் ஊராட்சியில் குறைந்த மின் அழுத்தப் பிரச்னையை சரி செய்ய வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. வட்டத்தலைவர் தண்டபாணி,

பொருளாளர் கலியமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர் .

**காய்கறி, பூ விவசாயத்திற்கு மாறிய செஞ்சி விவசாயிகள்**

செஞ்சி: நெல், கரும்பு பயிர் செய்வதில் சிரமங்கள் உள்ளதால், செஞ்சி பகுதி விவசாயிகள் பூ மற்றும் காய்கறி சாகுபடிக்கு மாறி உள்ளனர். செஞ்சி பகுதியில் நெல், கரும்பு பயிர்கள் சாகுபடியில் முதலிடத்தில் உள்ளன. அடுத்து வேர்கடலை சாகுபடி செய்கின்றனர். சில ஆண்டுகளாக நெல், கரும்பு, வேர்கடலை பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் பல பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். ஊரக வேலை உறுதி திட்டம் துவங்கப்பட்ட பிறகு நடவு, களை எடுப்பு பணிக்கு பெண்கள் வருவது வெகுவாக குறைந்தது. சில ஆண்டுகளாக மழையின்றி நெல் பயிர் சாகுபடி செய்ய கிணற்றில் போதிய தண்ணீர் கிடைப்ப தில்லை. இதனால் மாற்று பயிரான கத்தரி, வெண்டை, புடலங்காய், பீர்க்கன் உள்ளிட்ட காய்கறிகள், சாமந்தி, ரோஜா, கோழிக்கொண்டை உள்ளிட்ட பூ ரகங்களையும் பயிரிடுகின்றனர். இந்த பயிர்களிலும் தண்ணீர் பற்றாக்குறையின்றி சொட்டு நீர் பாசனம் மூலம் நடவு செய்கின்றனர். விளை நிலங்களை தரிசாக விடாமல் மாற்று பயிருக்கு மாறி இருக்கும் விவசாயிகளால் செஞ்சி பகுதியில் காய்கறி மற்றும் பூக்களின் வரத்து அதிகரித்து வருகிறது.

**கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டம்**

அரியலூர்: அரியலூரில் கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டம் நடைபெற்றது.அரியலூர் கோத்தாரி சர்க்கரை ஆலையில் நடைபெற்ற, கரும்பு உற்பத்தியாளர் சங்க கூட்டத்துக்கு, சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.கூட்டத்தில், கோத்தாரி சர்க்கரை ஆலையில் பதிவு செய்த கரும்புகரை ஆலைக்கு கொண்டு வரவும், பதிவுசெய்யாத கரும்பு, வெளி மாவட்டங்களிலிருந்து, இங்கு கொண்டு வர அனுமதிக்க முடியாது. சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலை, 20132014ம் பருவ ஆண்டுக்கு, தனது கரும்பு விவசாயிகளுக்கு சேர வேண்டிய நிலுவை

தொகையை கொடுக்காமல் சர்க்கரை ஆலையை திறக்க கூடாது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கரூரில் பறவைக்காய்ச்சல் இல்லை! : விழிப்புணர்வு கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் உறுதி

கரூர்: "கரூர் மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் இல்லை," என்று விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலெக்டர் ஜெயந்தி கூறினார்.கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பறவைக்காய்ச்சல் தடுப்பு குறித்து, கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வுக் கூட்டம், கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது.இக்கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது:கரூர் மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பாதிப்பு ஏதுமில்லை. கேரள மாநிலத்தில் பறவைக்காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டதன் காரணமாக, நமது மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆலோசனைக் கூட்டம் நடந்தது.வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை ஆகிய துறைகள் கால்நடைபராமரிப்புத் துறையுடன் இணைந்து குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் கோழி வளர்ப்பு மையங்களுக்குச் சென்று கண்காணிக்கப்பட்டு வருகின்றன.மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து கால்நடை மருந்தகங்களிலும் போதிய அளவு மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கோழிப்பண்ணை உரிமையாளர் களுக்கு நோய் தாக்குதலின்றி, கோழிகளை பாதுகாப்பது குறித்து பற்சி வழங்கப்படுகிறது. கால்நடை பராமரிப்புத்துறை பேராசிரியர், டாக்டர்கள் கூறும் ஆலோசனைப்படி கோழிப்பண்ணை மையங்களை முழுமையாக கண்காணித்து வர வேண்டும். கோழிகள் மீது ஏதேனும் மாற்றம் தெரிந்தால் உடனடியாக அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையை அணுகி டாக்டர்களின் ஆலோசனைப்படி உரிய சிகிச்சை யை கையாள வேண்டும். கோழி முட்டைகளை விற்பனைக்கு வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லும் போது பிளாஸ்டிக் பயன்படுத்துதல். பின்னர் அதே பொருளை மீண்டும் கோழிப் பண்ணைக்கு கொண்டு வருதல் கூடாது.நாள்தோறும் கோழிப்பண்ணையை கிருமி நாசினி மருந்தை தெளித்து கிருமிகள் வராதவாறு பார்த்துக் கொள்ள

வேண்டும் என கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பழனிவேல், மற்றும் கால்நடை டாக்டர்கள், ஆய்வாளர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வானம் தொட்டுவிடும் தூரம் தான்: தென்னை மரம் ஏறி சாதிக்கும் பெண்கள்

சின்னமனூர்: தென்னை மரங்களில் ஏறி காய் பறிப்பது, பராமரிப்பது ஆண்களால் மட்டுமே முடியும் என்ற நிலைமையை தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே ஓடைப்பட்டியை சேர்ந்த பெண்கள் மாற்றிவிட்டனர். பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரத்தின் உதவியுடன் 50 அடி உயர தென்னை மரத்தில் கூட சாதாரணமாக ஏறி பணி செய்கின்றனர். சின்னமனூரின் மேற்கு பகுதியில் மலையடிவாரத்தை ஒட்டி 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி நடக்கிறது. தென்னை விவசாயிகள் சந்திக்கும் பெரும் பிரச்னை உயரத்தில் உள்ள காய்களை பறிப்பது தான். மரம் ஏறும் தொழிலாளர்கள் பற்றாக்குறையால் தொழிலாளர்களை அழைத்து காய் பறிப்பது விவசாயிகளுக்கு சவாலாக மாறிவிட்டது. பெரியவிவசாயிகள் மொத்தமாக தென்னை வளர்ப்பதால் தேங்காய் பறிக்க நிரந்தர தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்கின்றனர். இதனால் சிறு விவசாயிகளின் தோட்டங்களுக்கு காய் பறிக்க ஆட்கள் வருவதில்லை. தொழிலாளர் பற்றாக்குறையால் சிறு விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஆர்வம் காட்டுவதில்லை. காமாட்சிபுரம் சென்டாக்ட் அறிவியல் மையத்தில் கே.வி.கே., திட்டத்தில் பெண்களுக்கு தென்னை மரம் ஏற, பராமரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. மரம் ஏறுவதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இயந்திரத்தின் உதவியுடன் தென்னை மரத்தில் எளிதாக ஏறி தேங்காய் பறிக்கின்றனர் ஓடைப்பட்டியை சேர்ந்த பெண்கள்.



**மாரிமுத்து, கே.வி.கே., திட்ட இயக்குனர்:** தமிழகத்தில் முதன் முறையாக பொள்ளாச்சி பகுதியில் மரம் ஏறும் இயந்திரத்தை பயன் படுத்தி தேங்காய் பறிப்பு, மரம் பழுது பார்க்கும் முறை அறிமுகமானது. ஆண்கள் மட்டுமே ஈடுபட்டு வந்த இந்த தொழிலில் பெண்களுக்கு பயிற்சியளித்து அவர்களாலும் தென்னை மரம் ஏற முடியும் என நிரூபித்துள்ளோம். நாங்கள் பயிற்சி கொடுத்த பெண்கள் மற்ற பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் அளவிற்கு முன்னேறி யுள்ளனர். மரம் ஏற வடிவமைக்கப்பட்ட இயந்திரத்தில் 'சேப்டி பெல்ட்' அறிமுகப்படுத்தப்படவுள்ளது. ஐம்பதுக்கு குறைவான தென்னை மரங்கள் வைத்திருப்பவர்கள் இந்த இயந்திரத்தின் உதவியுடன் வீட்டு பெண்களே காய் பறிக்க பழகி கொள்ளலாம். பணமும், நேரமும் மிச்சமாகும். **சுமதி, மரம் ஏற பயிற்சியளிப்பவர்:** மகளிர் சுய உதவி குழுவில் செயல்படுகிறோம். காமாட்சிபுரம் சென்டாக்ட் கே.வி.கே., சென்டரில் பெண்களுக்கு தென்னை மரம் ஏற பயிற்சியளிப்பது குறித்து கூறினர். கடினமான பணியில் எவ்வாறு ஈடுபடுவது என்ற தயக்கம் இருந்தது. முதலில் மன தைரியத்திற்காக யோகா பயிற்சியளித்தனர். மரம் ஏறும் இயந்திரத்தை இயக்கும் அளவிற்கு உடலில் பலம் அதிகரிக்க சில உடற்பயிற்சிகளை சொல்லி கொடுத்தனர். ஒரு வாரம் நடந்த பயிற்சியால் தென்னை மரம் ஏறுவது எளிதாகிவிட்டது. நாங்கள் கற்ற மரம் ஏறும் பயிற்சியை விருப்பப்பட்டவர் களுக்கு சொல்லி கொடுக்கிறோம். இதுவரை இருபது மகளிர் குழுவிற்கு பயிற்சியளித்துள்ளோம். விருப்பப்படுபவர்களுக்கு பயிற்சியளிக்க தயாராக உள்ளோம். **மகாலட்சுமி, மரம் ஏறுபவர், ஓடைப்பட்டி:** தென்னை மரம் குறித்த அனைத்து விஷயங்களும் அத்துபடியாகி விட்டது. தென்னை மரத்தை தாக்கும் நோய்கள், அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் போன்ற விபரங்களை சேகரித்து வைத்துள்ளோம். தேங்காய், இளநீர் என பாகுபாடு பிரித்து காய் பறிக்கிறோம். நாளொன்றுக்கு இருபது மரம் ஏறி காய் பறிப்பது, பழுது பார்க்க முடியும். குழுவாக இணைந்து செயல்படுவதால் பெரிய தோப்புகளில் கூட எங்களை காய் பறிக்க அழைக்கின்றனர். மரத்திற்கு 15 ரூபாய் கூலி வசூலிக்கிறோம். இது ஆண்கள் பெறும் கூலியை விட குறைவு. குறைந்த

எண்ணிக்கையில் தென்னை வளர்ப்பவர்கள் எங்களை அழைக்கின்றனர். தொலை தூர ஊர்களுக்கு செல்ல முடியவில்லை. நாள் தோறும் 300 ரூபாய் சம்பாதிக்கிறோம், என்றார். முயன்றால் முடியாதது எதுவுமில்லை, என்பதற்கு உதாரணமாக சின்னமனூர் பகுதி பெண்கள் தென்னை மரம் ஏறி சாதிக்கின்றனர்.

**<u>விலங்குகளால் பாதிப்பு குறையும்விவசாயிகள் நம்பிக்கை</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதியில் மழை பெய்துள்ளதால் விலங்குகளால் விவசாய நிலங்களில் பாதிப்பு குறையும் என விவசாயிகள் நம்புகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. இதனால் வனத்திற்குள் விலங்குகளுக்காக கட்டடப்பட்ட தடுப்பணை, ஆற்றில் தண்ணீர் இல்லை. மான்,யானை, பன்றிகள், காட்டெருமை ஆகியன தண்ணீர் தேடி விளை நிலங்களில் புகுந்து அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் குடித்து வந்தது. இவ்வாறு வரும் விலங்குகள் விளைநிலங்களில் பயிர்களை துவம்சம் செய்து வந்தன. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். தற்போது ஸ்ரீவி., வனப்பகுதியில் மழை பெய்து ஆற்றில் வெள்ளம் ஓடி வருகிறது. வனப்பகுதி தடுப்பணை, சிறிய குளம் போன்றவைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. தண்ணீருக்காக விலங்குகள் வெளியேறுவது குறைந்து வருகிறது. மம்சாபுரத்தை சேர்ந்த விவசாயி மாரியப்பன்,"" கடந்த ஓராண்டாக ஆற்றில் தண்ணீர் இல்லாதால் மா, எலுமிச்சை, பலா மரங்களை மான்,யானை, காட்டெருமை புகுந்து சேதத்தை விளைவித்தது. தற்போது மழை பெய்து வனப்பகுதிக்குள் தண்ணீர் இருப்பதால் விலங்குகளால் விவசாய பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவது குறையும்," என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**பண்ணை குட்டை அமைத்தால் விவசாயிகள் பயன்பெறலாம்**

காவேரிப்பாக்கம், : பண்ணை குட்டை அமைத்தால் விவசாயிகள் பயன்பெறலாம் என காவேரிப்பாக்கம் வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்த்துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், பண்ணை குட்டை அமைக்கவுள்ள விவசாயிகள் பட்டியல் காவேரிப்பாக்கம், பானாவரம், பாராஞ்சி ஆகிய வேளாண் விரிவாக்க மையங்களில் தயாரிக்கப்பட்டு வருகிறது.பண்ணை குட்டை அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் பெயரை அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் டிசம்பர் 15ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.மேலும் விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் தாழ்வானப் பகுதியில் பண்ணை குட்டை அமைத்து மீன்கள் மற்றும் கால்நடைகள் வளர்க்க வேண்டும்.இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். விவசாயிகளும் பயன்பெறலாம் என காவேரிப்பாக்கம் வேளாண் உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

**50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு தட்டைபயிர் விதை**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி தாலுகாவிற்குட்பட்ட வடக்கு, தெற்கு, மற்றும் ஆனைமலை வட்டாரத்தில், மானாவாரி பயிர் சாகுபடி மேற்கொ ள்ளும் விவசாயிகளுக்கு வேளாண்மைதுறை மூலம் ஆண்டுதோறும் தை, சித்திரை மற்றும் கார்த்திகை பட்டைத்தை எதிர்நோக்கி மானிய விலையில் விதைகள் வினியோகிக்கப்படுகின்றன. இதில் பொ ள்ளாச்சி வடக்கு மற்றும் தெற்கு வட்டார பகுதியில் தற்போது தைப்பட்டத்தை எதிர்நோக்கி விவசாயிகள் மானாவரி சாகுபடியில் ஈடுபடுகின்றனர். இதையடுத்து அவர்களுக்கு தேசிய

உணவு உற்பத்திகுழுமம் பயிர் வகை திட்டத்தின்கீழ் தட்டை பயிர் விதை 50 சதவீத மானியத்தில் வேளாண்துறை சார்பில் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேளாண் அதிகாரிகள் கூறுகையில், தட்டை பயிறு விதை வேளாண்மைதுறை மூலம் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள் ளது. விரும்பும் விவசாயிகள் உரிய ஆவனங்களுடன் வேளா ண்மை அலுவலகத்திற்கு வந்து விதைகளை வாங்கி பயனடையலாம் என்றனர்.

**<u>பறவை காய்ச்சல் அறிகுறி இல்லை கால்நடை துறை அதிகாரி தகவல்</u>**

கோவை, : கோவை மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் (பொறுப்பு) பெருமாள்சாமி கூறுகையில், ‘‘ அன்னூர் உள்ளிட்ட பகுதியில் ஆய்வு நடத்தியதில் பறவை காய்ச்சல் அறிகுறி தென்படவில்லை. பறவை காய்ச்சல் இருந்தால் கோழியின் தலை வீக்கமாக இருக்கும். ரத்த கசிவு ஏற்படும். கோழியின் தொடை பகுதியில் ரத்த கட்டு, வீக்கம் காணப்படும். ஆனால் கோவை மாவட்டத்தில் இந்த அறிகுறி யில் எந்த கோழியும் கண்டறியப்படவில்லை. சில கோழிகள் வெள்ளை கழிச்சலில் (ராணிக்கட்) இறந்தன. சுகாதாரமான சூழ்நிலையில் கோழிகளை பராமரிக்காமல் விடுவதால் இந்த நோய் தாக்கம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க, அனைத்து கால்நடை மருத்துவமனை, மருந்தகங்களில் கோழிகளுக்கு குறிப்பாக புறக்கடை கோழிகளுக்கு வாரந்தோறும் சனிக்கிழமை ஆர்.டி. வேக்சின் என்ற தடுப்பூசி போடப்படுகிறது. தேவையான அளவு தடுப்பூசிகள் தயார் நிலையில் மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளது. கழிச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறி இருந்தால் கோழிகளை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வரலாம் என தெரிவித்து வருகிறோம். கோழி இறைச்சி, முட்டை சாப்பிட்டால் பாதிப்பு எதுவும் வராது. முட்டை, இறைச்சியை வேக வைத்து சாப்பிடுகிறோம். 70 டிகிரி வெப்பநிலையில், இறைச்சியில் எந்த கிருமி இருந்தாலும் அழிந்து விடும். எனவே சிக்கன் சாப்பிடுவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது, ’’ என்றார்.

## நடமாடும் பரிசோதனை நிலையம் மூலம் மூன்று நாட்களில் 150 மண் மாதிரி ஆய்வு

பள்ளிபாளையம், : நடமாடும் மண் பரிசோதனை நிலையம் மூலம் பள்ளிபாளையம் பகுதியில் 150 மண் ஆய்வுகள் செய்யப்பட்டு உரத்தின் தன்மை குறித்து விவசாயிகளுக்கு அறிக்கை தரப்பட்டது. பள்ளிபாளையம், காடச்சநல்லூர், கொக்கராயன்பேட்டை ஆகிய மூன்று கிராமங்களில் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் கடந்த சில நாட்களாக மண் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. நடமாடும் மண் ஆய்வு நிலையத்தின் வேளாண்மை அலுவலர் ஜெயகுமார், உதவி அலுவலர் தனம், பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக், வேளாண்மை அலுவலர் பூங்கொடி, உதவி வேளாண்மை அலுவலர்கள் குமார், செல்வராஜ் ஆகியோர் இந்த ஆய்வு பணியில் ஈடுபட்டனர். 3 நாட்கள் நடைபெற்ற இந்த ஆய்வில் விவசாய கிராமங்களுக்கு நடமாடும் ஆய்வு மைய பேருந்தில் சென்ற அதிகாரிகள் விவசாயிகளின் மானாவாரி நிலங்களில் மண் மாதிரிகளை சேகரித்து அவற்றை ஆய்வுக்குட்படுத்தினார்கள். மண்ணின் தன்மை, வளம், அடுத்து செய்யப்போகும் பயிர்கள், அதற்கேற்ற உரங்களை பயன்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். ஆய்வு குறித்த அறிக்கைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 3 நாட்களில் 150 மண் ஆய்வுகள் செய்யப்பட்டது.

## முட்டை உடைவதை தடுக்க வானிலை மையம் யோசனை

நாமக்கல், : பண்ணைகளில் முட்டை உடைவதை நாமக்கல் கால்நடை வானிலை மையம் ஆலோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கை: பகல் வெப்பம் குறைந்தும், பகல் வெளிச்சம் நிலவும் நேரத்தில் மாற்றம் காணப்பட்டு குறைவாகவும் இருக்கும். இதனால் கோழிகளுக்கு தேவைப்படும் வைட்டமின்கள், டி3 வைட்டமின் தேவை அதிகமாக காணப்படும். தீவனத்தில் அதன் சேர்வையின் அளவை அதிகரிக்கவேண்டும்.

தனியாக கிடைக்கும் வைட்டமின் டி3 மருந்துகளையும் தீவனத்தில் சேர்க்கலாம். இதனால் முட்டை உடைவையும் குறைக்கலாம்.தற்போது சின்ன வெங்காயம் நடவு செய்யும் பருவம் என்பதால் இலைப்பேன் தாக்குதலில் இருந்து பயிரிரை பாதுகாக்க சின்ன வெங்காயம் நடவு செய்யும் வயலில் வரப்பு ஓரங்களிலும் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராயக்கோட்டையில் தக்காளி கிலோ ரூ16க்கு விற்பனை

ராயக்கோட்டை, : கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் கூடும் தினசரி தக்காளி மார்க்கெட் பிரசித்தி பெற்றதாகும். இங்கு, 25 கிலோ பிளாஸ்டிக் கூடைகளில் தக்காளியை அடுக்கி வைத்து விற்பனை செய்வது வழக்கம். சீசன் சமயங்களில் அதிகபட்சமாக ஒரு மண்டிக்கு 2,000 கூடைகள் வீதம் 10,000 கூடை தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்படும். தற்போது, நாள் ஒன்றுக்கு 2,000 கூடை தக்காளி மட்டுமே வரத்து காணப்படுகிறது. இதனால், விலை உயர்ந்து வருகிறது. நேற்றைய மார்க்கெட்டில் ஒரு கூடை தக்காளி ரூ400க்கு ஏலம் போனது. இதன்மூலம் ஒருகிலோ தக்காளி ரூ16 ஆக விலை உயர்ந்துள்ளது. வெளியூர் வியாபாரிகளின் வரத்து குறைந்துள்ள நிலையில், அருகாமையில் உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் மட்டும் கொள்முதலுக்காக வந்திருந்தனர். இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: வெளியூர் மார்க்கெட்டுகளில் தக்காளி வரத்து சீராக உள்ள நிலையில், ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள வியாபாரிகளின் வரத்து சரிந்துள்ளது. ராயக்கோட்டை பகுதியில் 3 மாத பயிரான தக்காளி அறுவடை இறுதிக்கட்டத்தில் உள்ளது. இதனால், வரத்தும் சரிந்துள்ளது. புதிதாக நடவு செய்த பயிர்கள் அறுவடைக்கு வந்தால் மட்டுமே வரத்தும் அதிகரிக்கும். வரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அறுவடை தொடங்கி ஜூன், ஜூலை வரையிலும் உச்சக்கட்ட சீசன் காணப்படும். எனவே, ஜனவரி மாதம் வரையிலும் விலை உச்சத்தில் இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் ரூ3 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல், : நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. நாமக்கல் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டு 210 பருத்தி மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இந்த ஏலத்தில் திருச்செங்கோடு, திருப்பூர், ஈரோடு, ஆகிய ஊர்களைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர். ஆர்.சி.எச். பருத்தி குவிண்டால் ரூ 3690 முதல் ரூ4300 வரை ஏலம் போனது. இதன்மூலம் ரூ2.90 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

## முருங்கையை தாக்கும் பழ ஈ கட்டுப்படுத்த ஆலோசனை

கரூர், : முருங்கை செடி யில் ஏற்படும் பழ ஈக்களை கட்டுப்படுத்தி அதிக லாபம் பெற தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆலோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) முனியாண்டி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கரூர் மாவட்டத்தின் முக்கிய விவசாய சாகுபடி பயிர்களில் முருங்கைக்கும் முக்கிய இடம் உண்டு. கரூர் மாவட்டத்தில் 5ஆயிரம் ஏக்கர் பரப்பில் முருங்கை சாகுபடி செய்யப்படுகிறது. இதில், அரவக்குறிச்சி தாலுகா பகுதியில் மட்டும் இரண் டரை ஏக்கர் பரப்பில் பாதிக் கும் மேல் முருங்கை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. செடி முருங்கை பயிரி டும் பகுதியில் பழ ஈ தாக் குதல் அதிகமாக இருக்கும். பழ ஈக்கள் சிறியதாகவும், மஞ்சள் நிறமாகவும், சிவந்த கண்களுடன் இருக்கும். இந்த ஈக்கள் காய்களில் உள்ள நீண்ட பள்ளங்களில் முட் டைகளை ஈடுகின்றன. இரண்டு மூன்று நாட்களில் வெளியே வரும் கால்கள் இல்லாத வெண்மை நிற புழுக்கள் திசுக்களை சாப் பிடும். மிகவும் பாதிக்கப்பட்ட காய்களில் இருந்து நாள டைவில் பிசின் போன்ற திரவம் வடியும். காய்களில் பிளவுகளில் இருந்து துர்நாற்றம் வீசும். 7 முதல் 10 நாட்கள் வரை வளர்ந்த புழுக்கள் காய் களில் இருந்து நிலத்தில் விழுந்து கூட்டுப்புழுக்களாக மாறி அடுத்து காய்க் கும் பருவம் வரை நிலத்தில் உறக்க நிலையில் இருக்கும். கூட்டுப்புழுக்கள் தாய் ஈக்களாக மாறி

மீண்டும் சேதத்தை ஏற்படுத்தி வாழ்க்கை சுழற்சியை மீண்டும் தொடரும். எனவே, இந்த பூச்சிகளின் சேதத்தை குறைக்க செப்டம்பர் அக்டோபர் மாதத்திற்குள் விதைப்பு செய்வது நல்லது. இதன்பிறகு விதைக்கும் போது இதன் தாக்குதல் அதிகளவில் காணப்படும். பாதிக்கப்பட்ட பிஞ்சுகளை அல்லது காய் களை சேகரித்து மண் ணில் புதைத்தோ அல்லது நன்கு தீயிட்டோ எரித்து விட வேண்டும். மண்ணில் கூட்டுப்புழுக் களை வெளி யே கொண்டு வர இரண்டு மூன்று முறை உழவு செய்து காயவிட வேண்டும். காய் களின் மீது ஈக்கள் அமர்ந்து முட்டையிடுவதை தடுக்க 3 சதம் வேப்ப எண் ணெய் கரைசல் தெளிக்க வேண்டும். பிஞ்சு கள் உருவான 20 முதல் 30 நாள் இருக்கும் போது ஒரு லிட்டர் நீரில் 2 லிட்டர் 2மிலி டைக்குளோர்வார்ஸ் அல்லது 2 மிலி பெப் ரோனில் அல்லது 2 மிலி பென்தோயேட் என்ற அள வில் ஒன்றை தெளித்துக் கட்டுப்படுத்திட வேண்டும். இவ்வாறு 15 நாள் இடைவெளியில் நன்கு தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன்பு காய்களை பறித்து விட வேண்டும். மருந்து தெளித்த பின் 10 நாட்களுக்கு காய்களை பறிக்க கூடாது. எனவே, முருங்கை சாகுபடி செய்யும் விவசாயி கள் பழ ஈ தாக்குதலை உரிய முறையில் கட்டுப்படுத்தி நிறைந்த லாபம் பெறலாம். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## பருத்தியில் புருடுனியா புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் அதிகாரி யோசனை

பெரம்பலூர், : பருத்தியில் பருடுனியா புழுக்கள் தாக்குதலை எப்படி கட்டுப்படுத்துவது என்பது பற்றி வேளாண் அறிவியல் மைய அதிகாரி தெரிவித்துள்ளார். பெரம்பலூர் அருகே வல்லாபுரம் பிரிவு பாதையில் உள்ள தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) விஜயலட்சுமி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரியாக 40,000 ஹெக்டேர் பரப்பளவிற்கும் அதிகமாக பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிரிடப்பட்டுள்ள அநேக கலப்பினங்களில் புருடுனியா புழுக்களானது முதலாம் இளம் பருவம் முதல்

நான்காம் இளம் பருவ நிலைகளில் காணப்பட்டு பருத்தி செடிகளின் இலைகள், பூக்கள் மற்றும் இளம் சப்பைகளை தாக்குகின்றன. இதற்கு முக்கிய காரணம் தற்பொழுது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலை. கடந்த மாதம் பருத்தி செடிகளை தாக்கிய புருடுனியா புழுவின் அந்துப்பூச்சிகளின் பரவல் மற்றும் முட்டைகள் புழுக்களுக்கு சாதகமான சூழ்நிலை ஆகியவையே. இவை இலைகள் மற்றும் இளம் சப்பைகளை விரும்பி உண்ணுவதால் தாக்கப்பட்ட பகுதிகள் துளையிட்டு காணப்படுவதோடு இவற்றின் எச்சங்கள் செடிகளில் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்த புருடுனியா புழுக்களுக்கென உருவாக்கப்பட்ட மாத்திரைகளுடன் கூடிய இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற எண் ணிக்கையில் வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழித்து இனப்பெருக்கத்தை தடை செய்து கட்டுப்படுத்தலாம். மேலும் தாக்குதல் அதிகமாக இருக்கும் சமயத்தில் புருடுனியாவுக்கான நியூக்ளியர் பாலிஹைட்ரோசிஸ் வைரஸை (என்பிவி) 0.43 சதவீதம் ஒரு ஏக்கருக்கு 500 மில்லி லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது பருத்தியில் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட ரசாயன பூச்சிக் கொல்லிகளான தயோடிகார்ப் 75 சதவீதம் (டபுள்பி) 400 கிராம் குளோரன் ரினிலிபுரோல் 18.5 சதவீதம் எஸ் சி 60 மில்லி, புளுபெண்டிமைடு 39.35 சதவீதம் எஸ்.சி 40 மில்லி, இண்டாக்ஸாகார்ப் 14.5 சதவீதம் எஸ்.சி 200 மில்லி இவற்றில் ஏதாவது ஒன்றினை ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் ஒட்டும் திரவத்துடன் கலந்து செடிகள் நன்றாக நனையும்படி இளம் காலை, மாலை வேளைகளில் மட்டும் தெளித்து கட்டுப்படுத்தலாம். இவை குறித்த மேலும் விபரங்கள் பெற பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் (9787620754), திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர்(9944244582) மற்றும் வேளாண்மை அறிவியல் மைய பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுனர் (9787620754) ஆகியோரை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>தொட்டியம் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் கடலை பறிப்பு தீவிரம்</u>

தொட்டியம், : திருச்சி மாவட்டம் தொட்டியம் தாலுகாவில் ஏளூர்ப்பட்டி, காட்டுப்புத்தூர், தொட்டி யம் ஆகிய 3 பிர்காக்களில் உள்ள வாழ்வேள்புத்தூர், எம்.களத்தூர், நாகையநல்லூர், கிடாரம், முருங்கை, தோளூர்ப்பட்டி, காமலாபுரம், அரங்கூர், அப்பண்ணநல்லூர், கொளக்குடி உட்பட 30 வருவாய் கிராமங்களில் சுமார் 13ஆயிரம் ஏக்கரில் கடலை, சோளம், தட்டை, பாசி, துவரை, ஆமணக்கு பயிர் கள் சாகுபடி செய்துள்ளனர். இந்தாண்டு ஆடி மாதத்தில் பெய்ய வேண் டிய மழை தக்க தருணத்தில் பெய்யா மல் பொய்த்ததால் ஆடிப்பட்டத்தில் இப்பகுதி விவசாயிகள் விதை விதைக்காமல், ஆவணி மாதத்தில் காலம் தாழ்ந்து பெய்த மழையை நம்பி விதை விதைத்தனர். அதுவும் விதை விதை த்து முளைத்த பின்பு போதிய மழை பெய்யாத தால் முளைத்த மாணாவாரி பயிர்கள் கருகத்தொடங்கிய நிலையில் தென்மேற்கு பருவமழை மற் றும் வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு பெய்ததால் கருகியது போக மீதி பயிர் கள் துளிர் விட தொடங்கின. ஆடிப்பட்டத்தில் விதைவிதைத்திருந்தால் கார்த்திகை மாதம் தொடங்கியதிலிருந்தே கடலை பறிக்க தொடங்கி இருப்பார்கள். காலம் தாழ் த்தி மழை பெய்த தால் கடந்தசில தினங்களுக்கு முன்பிருந்து இப்பகுதியில் 5 ஆயிரம் ஏக்கரில் கடலை பறிக்கும் பணி தீவிர மாக நடைபெற்று வருகிறது. சமீபத்தில் பெய்த மழையின் ஈரப்பதம் காய்வதற்குள் கடலை செடிகளை பறித்தவிட வேண்டும் என்ற நிலையில் விவசாயிகள் தீவிரம் காட்டுவதால் விவ சாய தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

## <u>இருபோகம் செழிக்கும் செங்குளம் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>

சின்னமனூர், : பூலாநந்தபுரம் செங்குளம் கடலாக மாறியிருப்பதால் இரண்டாம் போகமும் செழிக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூரில் வேம்படிகளம், முத்துலாபுரம் விலக்கு, கே.கே.குளம், சீலையம்பட்டி, மார்க்கயன்கோட்டை, குச்சனூர், துரைச்சாமிபுரம் உள்ளிட்ட

பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது. வருடத்தில் நடக்கும் இரு போகங்களுக்கும் முல்லைப்பெரியாற்றின் பாசானத்தின் கருணையே பிரதானமாக இருக்கிறது. கடந்த ஜூன் 1ம் தேதி கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுக்கு முல்லை பெரியாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு தற்போது முதல் போகம் நிறைவடைந்துள்ளது. சின்னமனூர் பகுதிகளில் நான்காயிரம் ஏக்கர் வயல் வெளிகளுக்கும் நிலத்தடி நீர் ஊற்றெடுக்கவும் கருங்கட்டான்குளம், உடையகுளம், செங்குளம் உருவாக்கப்பட்டது. வருகின்ற தண்ணீர் உத்தமபாளையம் பகுதியில் பிரிந்து வருகின்ற பெரியவாய்க்காலின் மூலமாக மேற்படி குளங்கள் நிரப்பப்படுகிறது. ஆனால் இரு போகத்திற்கும் ஏற்படுகின்ற பாசனபற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்ள பேருதவியாக விளங்குகிறது. எப்போதும் முதல்போகம் முடிந்த பிறகு செங்குளத்தில் தண்ணீர் பாதியாக குறைந்து விடும். தற்போது முல்லைபெரியாற்றில் 142 அடி 36 ஆண்டுகள் கழித்து தேக்கப்பட்டதால் நடப்பாண்டு இரண்டாம் போகத்திற்கும் குறையாமல் தண்ணீர் தேக்கியதால் கடல்போல் காட்சியளிக்கிறது. அதனால் முதல் போகம் போல் இரண்டாம் போகமும் தொய்வின்றி உற்பத்தி செழிக்க வாய்ப்பு பிறந்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வரலாறு காணாத மழையால் குளங்கள் நிரம்பின ஆலங்குளம் பகுதியில் விவசாய பணிகள் தீவிரம்

ஆலங்குளம், : ஆலங்குளம் பகுதியில் பெய்த வரலாறு காணாத மழையால் குளங்கள், கிணறுகள் நிரம்பின. இதனால் இந்த பகுதியில் விவசாய பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஆலங்குளம் பகுதியில் கடந்த சில வருடங்களாக போதிய மழை இல்லாததால் குளங்கள், கிணறுகள் வறண்டு விவசாயம் செய்ய வழி யின்றி விவசாய குடும்பங்கள் கேரளா மற்றும் அண்டைமாநிலங்களுக்கு பிழைப்பு தேடி சென்றனர். ஜூன் மாதத்தில் துவங்கும் குற்றால சாரலும் கண்ணாம்பூச்சி காட்டிவந்தது. ஆனால் இந்த வருடம் வழக்கத்தைவிட வரலாறு காணாத அளவில் ஜூன் தொடங்கி கடந்த நவம்பர் வரை ஆலங்குளம் பகுதியில் 1851 மி.மீட்டர் பதிவாகி உள்ளது.

## கார்த்திகை தீபத்தையொட்டி குண்டுமல்லி கிலோ யி 1000 பூக்கள் விலை கிடுகிடு உயர்வு

புதுச்சேரி, : திருக்கார்த்திகையொட்டி பூக்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து உள்ளது. புதுவை மார்க்கெட்டில் குண்டுமல்லி கிலோ ரூ.1000க்கு விற்பனையானது. கடந்த புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் பூக்கள் விலை கடும் சரிவை சந்தித்தது. பூக்கள் சீசன் மட்டுமின்றி வெளிமாநிலங்களில் இருந்தும் வரத்து அதிகமாக இருந்ததால் விலை சரிவு காணப்பட் டது. இதனால் ஆயுதபூஜை, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளுக்கு பொதுமக்கள் பூக்களை ஆர்வமுடன் வாங்கி மகிழ்ந்தனர். இந்நிலையில் பூக்கள் சீசன் முடிவுறும் தருவாயில், கார்த்திகை தீபத்திருவிழா தொடங்கியதால் அவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. குறிப்பாக அரளி, சம்பங்கி, சாமந்தி, குண்டுமல்லி, முல்லை அரும்பு, ரோஸ் ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. 3ம்தேதி வரை ரூ.60க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சம்பங்கி நேற்று ரூ.100க்கு விற்பனையானது. இதேபோல் சாமந்தியும் ரூ.100க்கு விற்கப்பட்டது. ரூ.80க்கு விற்ற கலர் சாமந்தி ரூ.120 ஆக உயர்ந்துள்ளது. இதுதவிர ரூ.100க்கு விற்கப்பட்ட அரளி பூக்களின் விலை இருமடங்கு அதிகரித்து ரூ.200க்கு விற்றது. ரூ.90க்கு விற்பனையான ரோஸ் ரூ.150 ஆகவும், ரூ.600க்கு வழங்கப்பட்ட குண்டுமல்லி 1000 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. முல்லை அரும்பு ரூ.500-லிருந்து ரூ.800 ஆக வும், கோழிக் கொண்டை ரூ.45லிருந்து ரூ.60 ஆகவும் அதிகரித்துள்ளது. ரூ.200க்கு விற்கப்பட்ட கனகாம்பரத்தின் விலை அதே நிலையில் நீடிக்கிறது. பூக்களின் திடீர் விலையேற்றம் குறித்து புதுவை பெரியமார்க்கெட் பூ வியாபாரி பார்த்தசாரதி கூறுகையில், புதுச்சேரிக்கு கிருஷ்ணகிரி, வேலூர், திண்டுக்கல், சேலம், வேட்டவலம், திண்டிவனம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பல்வேறு ரக பூக்கள் விற்பனைக்கு வரு கிறது. இவை அனைத்தும் பெரிய மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து மற்ற பகுதிகளுக்கு விற்பனையாகிறது. கார்த்திகை தீபம் மற்றும் சீசன் முடிவுறும் தருவாயில்

இருப்பதால் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மார்கழி வரை இதே நிலை நீடிப்பதற்கான வாய்ப்பு உள்ளது, என்றார். பூக்களின் விலையேற்றம், புதுவை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ஏற்கனவே பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், பூக்களின் விலை உயர்வு பெண்களை கவலையடைய செய்துள்ளது.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிகொல்லி மருந்துகள் இளையான்குடி திமுக செயற்குழு தீர்மானம்

இளையான்குடி, : விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்துகளை அரசு மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் இளையான் குடி மேற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இளையான்குடி மேற்கு ஒன்றியம் சார்பில் திமுக செயற்குழு கூட்டம் நடந் தது. அவைத்தலைவர் பெரியசாமி தலைமை தாங்கினார். இளையான் குடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் செல்வராசன், பேரூராட்சி செயலர் நஜிமுதீன், இளைஞரணி அமைப்பாளர் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாளை சிவகங்கைக்கு வரும் கழக பொதுச்செயலாளர் பேராசிரியர்அன்பழகனை ஒன்றியம் சார்பில் திமுகவினர் திரளாக கலந்து கொன்டு வரவேற்பது. இளையான்குடி பகுதியில் பெய்த தொடர்மழையால் நெல், மற்றும் மிளகாய் பயிர்களில் பூச்சி தாக்குதல் அதிகமாக உள்ளது. தேவையான நல்ல மருந்துகள் கிடைக்காமல் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர். கூட்டுறவு சங்கங்களில் மானிய விலையில் பூச்சிகொல்லி மருந்துகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற ஆண்டிற்கான பயிர்காப்பீட்டு தொகையை விவசாயிகளுக்கு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் செல்லச்சாமி, அய்யாச்சாமி, சேகர், மலைமேகு மற்றும் வழக்கறிஞர்கள் பார்த்தசாரதி, ரவீந்திரன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மலைச்சாமி, சேகர் ஆகி யோர் உட்பட ஒன்றிய திமுக நிர்வாகிகள் அனை வரும் கலந்துகொண்டனர்.

**மானாமதுரை பகுதி கண்மாய்களில் பெருகி வரும் மீன்கள் மீன் வலை வாங்க விவசாயிகள் ஆர்வம்**

மானாமதுரை,: கண்மாய்களில் பெருகி வரும் மீன்களை பிடிக்க தேவை யான விதவிதமாக நைலான் வலைகள் மானாமதுரை சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளன. இவற்றை வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிவகங்கை மாவட்டத்தில் 300க்கும் மேற்பட்ட பெரிய கண்மாய்களும், 500க்கும் மேற்பட்ட சிறிய குளங்களும் உள்ளன. இந்த ஆண்டு பருவமழை நன்கு பெய்துள்ளதால் கண்மாய்கள், குளங்கள் நிரம்பியுள்ளன. மேலும் வைகை அணையில் இருந்து திறந்து விடப்பட்ட நீராலும் கண்மாய்கள் நிரம்பியுள்ளன. நீர் நிறைந்த கண்மாய்களில் நாட்டு ரக மீன்களான அயிரை, கெழுத்தி, கெண்டை, உழுவை, புல்லு கெண்டை, ஜிலேபி கெண்டை மீன்களும் அதிக அளவில் வளர்ந்து வருகின்றன. மேலும் சில விவசாயிகள் கட்லா, ரோகு, மிர்கால் போன்ற வளர்ப்பு மீன்களின் குஞ்சுகளை தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள மீன்பண்ணைகளில் இருந்து வாங்கி ஊர்ப்பொது கண்மாய்களில் வளர்த்து வருகின்றனர். தற்போது இவை நல்ல பருமனுடன் விற்பனைக்கு தயாராக இருப்பதால் இவற்றை பிடிக்க தேவை யான வலைகளை வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் மீன்பிடி வலைகள் தயாரிக்கப்படும் ராமேஸ்வரத்தில் இருந்து விற்பனைக்காக ஏராளமான வலைகளை வியாபாரிகள் வரவழைத்துள்ளனர். இது குறித்து காளையார்கோவில் அருகே காயா ஓடையை சேர்ந்த மீன்வலை வியாபாரி கோபால் கூறுகை யில், மழை பெய்து கண்மாய் நிரம்பினால் அதில் மீன்கள் அதிகம் இருக்கும். கடல் மீன்களை விட கண்மாய், குளங்களில் வளரும் மீன்க ளில் ருசி அதிகம் இருக்கும் என்பதால் மீன்பிடி வலை கள் வாங்கி விற்கிறோம். மீன்பிடி வலைகள் பிடிக்கப்படும் மீன்களின் ரகத்திற்கு ஏற்ப வலைகளின் இடைவெளி அளவு இருக்கும். உதாரணமாக ஆயிரை மீன்களை பிடிக்கும் வலைகள் ரூபாய் 650க்கும் பெரிய மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் மீன்களை பிடிக்கும் வலைகள் ரூபாய் 250க்கும் விற்பனை செய்கிறோம் என்றார். மீன்பிடி வலைகள் வாங்க வந்த விவசாயி முனியாண்டி கூறுகையில்,

கடல் மீன்களை விட கண்மாய்களில் பிடிக்கப்படும் மீன்கள் உடனடியாக சமைக்க முடிகிறது. இவற்றில் நல்ல ருசி இருக்கும். மேலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் கண்மாய் மீன்களை விரும்புவதால் விலை அதிக மாக இருந்தாலும் கண்மாய் மீன்களை ருசி பார்க்க நூற்றுக்கணக்கில் கொடுத்து வலைகளை வாங்கி செல்கிறோம் என்றனர்.

**<u>குறைவான செலவு, கூடுதல் மகசூல் விவசாயிகளுக்கு இஸ்ரேல் தொழில்நுட்ப பயிற்சி கலெக்டர் தகவல்</u>**

திண்டுக்கல், : குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெறுவதற்கு விவசாயிகளுக்கு இஸ்ரேல் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். செய்திமக்கள் தொடர்புத்துறை மூலம் தோட்டக்கலைத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த செய்தியாளர் பயணம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. இதில் திட்டங்கள் குறித்து விவசாயிகளை நேரடியாக சந்தித்து விபரங்கள் சேகரிக்கப்பட்டன. பின்பு கலெக்டர் தெரிவித்ததாவது: இஸ்ரேல் விவசாய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இஸ்ரேல் நீர் ஆதாரம் இல்லா நாடாகும். மண்வளமும் அங்கு இல்லை. இருப்பினும் பசுமைக்குடவுன், நிலப்போர்வை தொழில்நுட்பத்தில் சொட்டுநீர்ப்பாசனம் மூலம் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். இந்த நவீன தொழில்நுட்பத்தின் மூலம் நாற்றுக்களை தட்டுக்களில் உற்பத்தி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிறது. பசுமைக்குடோன், நிலப்போர்வையில் சாகுபடி செய்தால் தண்ணீர் ஆவியாகாது. சொட்டுநீர் பாசனத்தில் 20 முதல் 30 சதவீதம் தண்ணீர் மிச்சமாகும். ஆனால் நிலப்போர்வையில் சாகுபடி செய்தால் 60சதவீதம் தண்ணீர் மிச்சமாகும். களை வளராததால் அதற்கான செலவு குறையும். மண் இறுகாது. இதுபோன்ற காரணங்களால் இடுபொருள், பராமரிப்புச் செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். செய்தியாளர் பயணத்தின் போது தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராமநாதன், உதவிஇயக்குநர் கிஷோர்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சாலிதளபதி,

தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பெருமாள்சாமி, சென்றாயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**உரிய விலை கிடைக்கும் வரை விளைபொருட்களை கிட்டங்கிகளில் சேமிக்கலாம் வேளாண் வணிக துணை இயக்குநர் தகவல்**

திண்டுக்கல், : உரிய விலை கிடைக்கும் வரை விளைபொருட்களை வேளாண் விற்பனைக்கூட சேமிப்பு கிட்டங்கிகளில் சேமிக்கலாம் என்று வேளாண் வணிக துணை இயக்குநர் செல்வராஜ் தெரிவித்துள்ளார். மாவட்ட வேளாண் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, கோபால்பட்டி, நத்தம் மற்றும் வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இது 11ஆயிரத்து 800 டன் கொள்ளளவு கொண்டது. நடப்பு ஆண்டில் 16ஆயிரத்து 459டன் விளைபொருட்களை விவசாயிகள், வியாபாரிகள் இருப்பு வைத்து பயன்பெற்றுள்ளனர். விளைபொருட்களின் இருப்பிற்கேற்ப அதன் மதிப்பில் 75 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.2லட்சம் ஆண்டிற்கு 5 சதவீத வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்படும். இருப்பு வைத்துள்ள விளைபொருட்களை வாங்கும் வியாபாரிகளும் விளைபொருட்களை இங்கேயே இருப்புவைத்துக் கொள்ளலாம். இதேபோல் பழநி ஆயக்குடியில் கொய்யா மற்றும் பழங்கள் உற்பத்தியாளர்கள் கம்பெனியும், ஒட்டன்சத்திரத்தில் முருங்கை மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளர்கள் கம்பெனியும் அமைக்கப்பட்டு கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மாவட்டத்தில் சீரான மழை பெய்திருப்பதால் விவசாயப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பயிர் வரும் ஜனவரி, பிப்ரவரியில் அறுவடைக்கு வரும். அப்போது இந்த சேமிப்புக்கிட்டங்கி மற்றும் குளிர்பதன கிட்டங்கிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காக கிராமங்களில் அறுவடை பின்செய்நேர்த்தி, தரம்பிரித்தல், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி மேற்காணும் வசதியைப் பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். மேலும் விபரங்களுக்கு 94425 61821, 94867 26760 ஆகிய எண்களைத்

தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண் வணிக துணை இயக்குநர் செல்வராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் கோழி இறைச்சி, முட்டைகளை நன்கு சமைத்து சாப்பிடலாம் கலெக்டர் மு.கருணாகரன் தகவல்



நெல்லை, பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், கோழி இறைச்சிகளை நன்கு சமைத்து சாப்பிடலாம் என்று நெல்லை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்து உள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள செய்தி குறிப்பில் கூறிஇருப்பதாவது:–

தடுப்பு நடவடிக்கை

கேரளா மாநிலத்தில் ஆலப்புழை மற்றும் கோட்டயம் ஆகிய மாவட்டங்களில் கடந்த மாதம் பறவை காய்ச்சலால் வாத்துகள் செத்தன. இதையொட்டி அங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அண்டை மாநிலமாக நமது தமிழ்நாடு இருப்பதால் நம் மாநிலத்துக்கு நோய் பரவி விடக்கூடாது என்பதற்காக தமிழக அரசு உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. கேரளாவில் இருந்து நெல்லை மாவட்டத்துக்குள் வரும் வழியில் உள்ள அனைத்து சாலைகளிலும் நெல்லை கால்நடை பராமரிப்பு துறையினரால் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு பணி நடைபெற்று வருகிறது. அங்கிருந்து வரும் அனைத்து வாகனங்களிலும் குறிப்பாக அங்குள்ள பண்ணைகளில் இருந்து வரும் வாகனங்கள் மூலமாக நோய் பரவி விடக்கூடாது என்பதற்காக கிருமி நாசினி தெளிக்கப்பட்டு

வருகிறது. கேரளா மாநிலத்தில் இருந்து இங்கு கொண்டு வரப்படும் வாத்து முட்டைகள், வாத்து குஞ்சுகள் மற்றும் கோழித்தீவனத்துக்கான மீன் துகள்கள், கடுவாடுகள் ஆகியவை தடை செய்யப்பட்டு உள்ளது. தமிழகத்தில் தற்போது பறவை காய்ச்சல் நோய் இல்லை. தற்போது மழைக்காலம் என்பதால் கோழிகளுக்கு பரவும் வெள்ளக்கழிச்சல், காற்றுப்பை நோய், தலைவீக்க நோய், கம்போரா மற்றும் மேரக்ஸ் ஈகோலி நோய் போன்ற நோய்கள் பரவ வாய்ப்பு உள்ளது. இது பொதுவாக கோழிகளுக்கு தாக்கும் நோய்கள் ஆகும். இந்த வகை நோயால் பொது மக்களுக்கு பாதிப்பு இருக்காது.

<u>நோய் அறிகுறிகள்</u>

பறவை காய்ச்சல் நோய்க்கான சிறப்பு அறிகுறிகள் உள்ளன. காலில் ரத்த காய்ச்சல், பாத வீக்கம், தலை வீக்கம், மூக்கில் இருந்து நீர் வடிதல், கண்கள் மூடிஇருத்தல், கொண்டை கருத்து வீங்கி இருத்தல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் மட்டுமே அது பறவை காய்ச்சல் ஆகும். எனவே பொது மக்கள் தங்களது பகுதியில் அதிக அளவு கோழிகள் இறப்பு ஏற்பட்டால், உடனே அருகில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரியை தொடர்பு கொள்ளுங்கள். கால்நடை டாக்டர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்துக்கே வந்து நடவடிக்கை எடுப்பார்கள். இதற்காக ஒரு யூனியனுக்கு தலா 3 குழுக்கள் நியமிக்கப்பட்டு உள்ளன.

<u>சமைத்து சாப்பிடலாம்</u>

மாவட்டத்தில் உள்ள அனைத்து கோழிப்பண்ணைகளும், கால்நடை பராமரிப்புத் துறையின் சிறப்புக் குழுக்கள் ஆய்வு செய்து வருகிறது. நோய் வரும் முன்பு காப்பதற்கான சிறப்பு உயிரியியல் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு தகுதி ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளது. நெல்லை மாவட்டத்தில் தற்போது பறவை காய்ச்சல் இல்லை, எனவே பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், கறிக்கோழிகள் ஆகியவற்றை நன்கு சமைத்து சாப்பிடலாம். வெளிநாட்டு

பறவைகள் வரும் கூந்தன்குளம் சரணாலயம் மற்றும் கடையம் வாகைக்குளம், திருப்புடைமருதூர், திருக்குறுங்குடி வட்டகுளம் ஆகிய நீர்நிலைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே பொது மக்கள் அச்சப்படவோ, பீதி அடையவோ தேவையில்லை. இவ்வாறு நெல்லை மாவட்ட கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்து உள்ளார்.

## <u>தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மின்னாளுமை திட்டத்தில் வருவாய்த்துறை சான்றிதழ்கள் பெறும் புதிய வசதி:கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன்</u>

திருச்சி, வாழவந்தான்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மின்னாளுமை திட்டத்தில் வருவாய்த்துறை சான்றிதழ்கள் பெறும் புதிய வசதியை கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தொடங்கி வைத்தார்.

<u>சான்றிதழ்கள்</u>

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் வட்டத்தில் வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்படும் சாதி, வருமானம், இருப்பிடம், முதல் பட்டதாரி மற்றும் விதவை சான்றுகள் மின்னாளுமை திட்டத்தின் மூலம் பெறும் வசதியை வாழவந்தான் கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் நேற்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:- திருச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் நலன் கருதி, மக்களுக்கு தேவைப்படும் வருவாய்த்துறை சான்றுகளை வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு செல்லாமல் நேரம் விரயமின்றி பெற்றுக் கொள்ள மின்னாளுமை திட்டம் ஏற்கனவே ஸ்ரீரங்கம் வட்டத்தில் கடந்த ஜுன் மாதம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

<u>ரூ.50கட்டணம்</u>

ஸ்ரீரங்கம் வட்டத்தில் இதுவரை 18,464 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 16,713 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,751 மனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன. அதேபோல் திருச்சி மேற்கு வட்டத்தில் கடந்த 26-ந்தேதி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் நேரடியாக விண்ணப்பிக்கும் போது கிராம நிர்வாக அதிகாரி, வருவாய்

ஆய்வாளர், தாசிதார் ஆகியோர் அலுவலகங்களுக்கு செல்ல தேவையில்லை. சான்றிதழ்கள் விண்ணப்பித்து ஒரு வார காலத்திற்குள் வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும். அதன்படி திருவெறும்பூர் வட்டத்தில் வேங்கூர், நடராஜபுரம், திருவெறும்பூர், கூத்தைப்பார், துவாக்குடி, வாழவந்தான் கோட்டை, அசூர், நவல்பட்டு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அந்தந்த பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ. 50 கட்டணமாக செலுத்தி அனைத்து வேலை நாட்கள் மற்றும் சனிக்கிழமை மதியம் வரை மட்டும் (ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களை தவிர) உரிய அசல் மற்றும் நகல் ஆவணங்களுடன் சென்று சாதி, வருமானம், இருப்பிடம், முதல் பட்டதாரி மற்றும் விதவை ஆகிய சான்றுகளுக்காக மனு செய்து கொள்ளலாம்.

வேண்டுகோள்

மேற்கண்ட சான்றுகளுக்காக வருவாய்த்துறை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு பொதுமக்கள் இனி செல்ல வேண்டிய தேவையில்லை. மனு பதிவு செய்த மையத்திற்கு சென்று மேற்கண்ட சான்றுகளை இணையதளம் மூலமாக பெற்றுக்கொள்ளலாம். எனவே, இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். விழாவில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (பொறுப்பு) மிருணாளினி, லால்குடி துணை கலெக்டர் சந்திரபானுரெட்டி, திருச்சி உதவி கலெக்டர் கணேசமுருகன், துணைப்பதிவாளர் சித்ரா, தாசில்தார் செந்தாமரை, உதவி கலெக்டர் (பயிற்சி) அம்ரித், தனி அலுவலர் செல்வராஜ், வாழவந்தான்கோட்டை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தலைவர் கதிரவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.